[1993 ஏப்ரல் 2

சதவீதம் மட்டுமே ஈல்டு கிடைப்பதாக தகவல் கிடைத்திருப்பதன் மூலம் இத்தகைய தொழில் பொருளாதாரத்தில் இலாபகரமாக இருக்காது என்று இங்கே பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தப் புளிச்சகீரையினைப் பயன்படுத்தி பேப்பர் தயாரிக்கும் எந்தத் தொழிலும் தற்போது தமிழகத்திலே இல்லை.

230—

அக்கரைப்பள்ளிவாசலைக் கடல் நீர் அரிப்பிலிருந்து தடுத்தல்

*10498— திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் வட்டம், பெரியக்குத்தகை கிராமத்தில் உள்ள அக்கரைப்பள்ளிவாசல் கடல் நீர் அரிப்பினால் பாதிக்கப் படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், கடல் நீர் அரிப்பைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். நிதி நெருக்கடி நிலை காரண மாக 1992–93ஆம் ஆண்டு பகுதித் திட்டத்தில் வினாவில் குறிப் பிட்டுள்ள கடல் நீர் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைப் பணி அங்கீ கரிக்கப்படவில்லை. இனிவரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும்.

235—

ஓசூர் தொழிற்பேட்டையிலுள்ள யூனி ரப்பர் நிறுவனம்

*17189— திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஓசூர் தொழிற்பேட்டையிலுள்ள Uni Rubber எனும் நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாக மூடப்பட்டு சுமார் 300 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

1993 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சுமார் 130 தொழிலாளர்கள் பணி புரிந்த ஓசூர் யுனி ரப்பர் அண்ட் ஃபுட்வேர் லிமிடெட் நிறுவனம் 1978-79 ல் ஆரம்பிக்கப்பட்டு, முக்கியமாக 'ஹவாய்' காலணி களை உற்பத்தி செய்து வந்தது. பொருளாதார நெருக்கடி யினால் நிறுவனம் 6—7—1990 தேதி முதல் மூடப்பட்டது. அந்த நிறுவனத்திற்குப் பண உதவி புரிந்த தமிழ்நாடு இண்டஸ்ட் ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் இந்த நிர்வாகத்தைத் தனக்குச் சேரவேண்டிய பணத்திற்கு ஈடாக 19—11—1990 அன்று எடுத்துக்கொண்டது. இந்த நிறுவனம் மூடியது தொடர் பாக தொழிலாளர் ஆணையர் முன்பு தொழிற் தகராறுச் சட்டப் பிரிவு 25-0ன் கீழ் ஜனவரி, 1991-ல் அனுமதி கோரி நிர்வாகம் தாக்கல் செய்த விண்ணப்பத்தின்மீது ஆணையர் உரிய விசாரணை மேற்கொண்டு 7—3—1991 அன்று நிறு வனத்தை மூடுவதற்கான அனுமதி வழங்கியுள்ளார். இது ஒரு (Defacto Closure) ஆகும்.

2. மேலும் இந்த நிறுவனத்தில் இயங்கி வந்த அண்ணா பொது ஊழியர் சங்கத்திற்கும், இந்த நிறுவனத்திற்கும் இடையே கிருஷ்ணகிரி தொழிலாளர் அலுவலர் முன்னிலையில் 6—4—1992 அன்று தொழிற் தகராறுச் சட்டப் பிரிவு 12 (3)ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் மூலமாக தொழிலாளர் களுக்குச் சேரவேண்டிய சட்டபூர்வமான சலுகைகளை அளிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி மூடுதல் ஏற்கப் பட்டதாலும், தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய தொகை பற்றி ஒப்பந்தம் ஒன்றும் ஏற்பட்டுள்ளதாலும் இப்பிரச்சினை இறுதியாக முடிக்கப்பட்டது.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்— விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு—ஓர் உரையின்தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என் பதைக் குறிக்கும்).

2. உரிமைப் பிரச்சினை

பேரவைத் தலைவர் மீது தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்ப தாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது குறித்து.

மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர்: அவை உரிமைமீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. எம். ரங்கராஜன் அவர்கள் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மீது